சென்னை, செங்கல்பட்டு பகுதியில் மழைநீர்வடிகால்தூர்வாரும்பணிகள்

தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா ஆய்வு



நங்கநல்லூர் முதல் பிரதான சாலை, கோவளம் வடிநிலப் பகுதியில் ரூ.58.97 கோடி மதிப்பில் 11.72கி.மீ.நீளத்தில்மேற்கொள்ளப்பட்டுவரும்ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

சென்னை, மே.26–

சென்னை, செங்கல்பட்டு பகுதியில் மழைநீர் வடிகால், தூர்வாரும் பணிகளை தலைமைச்செயலாளர் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா, சென்னை பெருநகர மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சி மற்றும் செங்கல்பட்டு மாவட்ட பகுதிகளில் தென் மேற்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள், தூர்வாரும் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்படி, சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு133 க்குட்பட்ட டாக்டர் நாயர் சாலையில் உள்ள மழைநீர் வடிகால்களில் ரூ.4.80 லட்சம் மதிப்பில்மேற்கொள்ளப்பட்டு வரும் வண்டல் தூர்வாரும் பணியினையும், வார்டு132 க்குட்பட்ட சுப்பிரமணியன் நகரில் உள்ள மழைநீர் வடிகாலில் ரூ.1.20 லட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வண்டல் தூர்வாரும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, ஆலந்தூர் மண்டலம், நங்கநல்லூர் முதல் பிரதான சாலை, கோவளம் வடிநிலப் பகுதியில் ரூ.58.97 கோடி மதிப்பில் 11.723 கிலோ மீட்டர் நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒருங்கிணைந்த மழை நீர் வடிகால் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ரூ.57.70 கோடி மதிப்பில் பள்ளிக்கரணையில் மேற்கொள்ளப் பட்டு வரும் மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணிகளையும் அவர் ஆய்வு செய்தார்.

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை நிதியின் கீழ், ரூ.25 கோடி மதிப்பில் ஒக்கியம் மடுவு கால்வாயினை மேம்படுத்திட மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ரூ.615 கோடி மதிப்பில் கொட்டிவாக்கம், பாலவாக்கம், ஈஞ்சம்பாக்கம் மற்றும் நீலாங்கரை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட ஈஞ்சம்பாக்கம் கடற்கரையில் தூய்மைப் பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் கடற்கரை தூய்மைப்படுத்தும் பணியினை தலைமைச் செயலாளர் பார்வையிட்டு, தூய்மைப் பணியாளர்களுடன் கலந்துரையாடினார்.

இந்த ஆய்வுகளின் போது தலைமைச் செயலாளர் நடைபெற்று வரும் பணிகளை துரிதமாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ளவும், இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அவ்வப்போதைய தகவல்களின் அடிப்படையில் தேவையான முன்னெச்சரிக்கை பணிகளை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தாம்பரம் மாநகராட்சி சார்பில் சிட்லபாக்கம் ஏரியில் ரூ. 32.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் விளையாட்டு திடலினை பார்வையிட்டுஆய்வுமேற்கொண்டார். அதன் தொடர்ச்சியாக செம்பாக்கம் மண்டலம், வார்டு 34க்குட்பட்ட ஜட்ஜ் காலனி பகுதியில் மழைநீர் வடிகால்களில் வண்டல் தூர் வாரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து, சிட்லபாக்கம் பகுதியில் நீர்வளத்துறை சார்பில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிட்லபாக்கம் ஏரியின் புனரமைப்பு பணிகளை பார்வையிட்டு வனத்துறை, நீர்வளத்துறை மற்றும் தாம்பரம் மாநகராட்சி அதிகாரிகளுக்கு பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார். மேலும் ஏரியின் மேம்பாடு குறித்து அறிவுரை வழங்கினார்.

தோழி மகளிர் தங்கும் விடுதி

தாம்பரம் சானடோரியம், ஜட்ஜ் காலனி பகுதியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் ரூ.23 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு 464 படுக்கைகள் வசதியுடன் இயங்கி வரும் பணிபுரியும் பெண்களுக்கான தோழி மகளிர் தங்கும் விடுதியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு விடுதியில் தங்கியுள்ள மகளிரிடம் அவர்களின் நலன் குறித்து கேட்டறிந்தார்.

தாம்பரம், இரும்புலியூர் ஏரியிலிருந்து முடிச்சூர் வரை ரூ.96.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் கட்டுமான பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இப்பணியை விரைந்து முடிக்க நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி பகுதியில் மழைநீர் வடிகால்களில் வண்டல் தூர் வாரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின்போது, சென்னை மாநகராட்சி கமிஷனர் ஜெ.ராதாகிருஷ்ணன், நெடுஞ்சாலைத்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறை கூடுதல் தலைமைச் செயலர் பிரதீப் யாதவ், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் பி.செந்தில் குமார், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரிய மேலாண்மை இயக்குனர் டி.ஜி.வினய் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சான்றிதழ்கள், பட்டா மனுக்கள் மீது 16 நாட்களில் தீர்வு: தமிழக அரசு அதிரடி உத்தரவு

சென்னை, மே.26–

சான்றிதழ்கள், பட்டா மனுக்கள் மீது 16 நாட்களில் தீர்வு காண வேண்டும் என்று தமிழக அரசு அதிரடி உத்தரவிட்டுள்ளது.

பொதுமக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான சாதி சான்றிதழ், இருப்பிடம், வருமானம், வாரிசு சான்றிதழ் உள்ளிட்ட 26 சான்றிதழ்கள் மற்றும் பட்டாக்களை வருவாய்த்துறை வழங்கி வருகிறது. இவை எளிதாக மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், வெளிப்படை தன்மையை உறுதி செய்வதற்காகவும் இந்த சேவைகள் அனைத்தும் ஆன்லைன் முறையில் கொண்டு வரப்பட்டு உள்ளது. இருப்பினும் இந்த சான்றிதழ்கள் மற்றும் பட்டாக்கள் பெறுவதில் மக்கள் அலையாய் அலைய வேண்டி உள்ளது. லஞ்சம் கொடுத்தால்தான் காரியம் நடக்கிறது என்று பொதுமக்கள் தரப்பில் இருந்து தொடர்ந்து புகார்கள் வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக தற்போது பட்டா மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் பணிகளின் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து தமிழக அரசின் கூடுதல் தலைமை செயலாளரும், வருவாய் நிர்வாக ஆணையருமான எஸ்.கே. பிரபாகர் அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் ஒரு சுற்றறிக்கை மூலம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது:

வருவாய்த்துறை வழங்கும் 26 சான்றிதழ்கள் மற்றும் பட்டா மாறுதல் கோரிக்கைகள் ஆகியவை குறித்த நேரத்தில் மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்ய வாரந்தோறும் நில அளவை ஆணையரகம் ஆய்வு பணி மேற்கொண்டு வருகிறது. அதனை மேலும் வலுப்படுத்தும் விதமாக ஒவ்வொரு தாலுகாவிற்கும் துணை கலெக்டர் அந்தஸ்தில் ஒரு சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட வேண்டும். அவருக்கு உதவியாக ஒரு துணை தாசில்தார் மற்றும் பிற தாலுகாவை சேர்ந்த ஒரு அலுவலர் பணியமர்த்த வேண்டும்.

இந்த சிறப்பு அதிகாரி, சான்றிதழ்கள் மற்றும் பட்டா மாறுதல்கள் குறித்த மனுக்கள் மீது தொடர்ச்சியாக ஆய்வு செய்து கண்காணிக்க வேண்டும். அவர், பட்டா மனுக்கள் மற்றும் சான்றிதழ்கள் கோரும் விண்ணப்பங்கள் மீது அதிகபட்சமாக 16 நாட்களுக்குள் தீர்வு காண்பதை உறுதி செய்யவேண்டும். மேலும் சிறிய காரணங்களை கூறி மனுக்கள் தள்ளுபடி செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

அதேபோல் தேதி வாரியாக வரிசைப்படி மனுக்களுக்கு ஒப்புதல் தரவேண்டும். அதாவது பின்னே விண்ணப்பம் செய்பவர்களுக்கு முன்னதாகவும், முன்னே விண்ணப்பம் செய்தவர்களுக்கு பின்னதாகவும் தரக்கூடாது. வரிசைப்படி முறையாக வழங்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சல்லானி கேபிடல் லிமிடெட்

(முன்னர் இந்தோ ஏஷியா பைனான்ஸ் லிமிடெட்)

CIN: L65191TN1990PLC019060

பதிவு அலுவலகம் : எண். 15, நியூ கிரி சாலை, தி.நகர், சென்னை – 600 017.

Tel: 044- 2834 2111 Email: info@challanicapital.com; Website: www.challanicapital.com

31 மார்ச், 2024ல் முடிந்த ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனியான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்.

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு (தணிக்கை யானது) 31.03.2024	முடிந்த ஆண்டு (தணிக்கை யானது) 31.03.2023	முடிந்த காலாண்டு (தணிக்கை யானது) 31.03.2023
செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம்	20.53	132.03	70.26
காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (விலக்கு அயிட்டங்களுக்கு முன்)	2.54	69.23	51.21
விலக்கு அயிட்டங்கள்	---	41.85	41.85
காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன்)	2.54	111.08	93.06
காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்)	2.54	111.08	93.06
காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	—	—	—
சமபங்கு மூலதனம்	1500.00	1500.00	1500.00
கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக)	(933.75)	(984.41)	(984.41)
ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/–)			
1. அடிப்படை	0.02	0.74	0.62
2. டைலூட்டட்	0.02	0.74	0.62

குறிப்பு: SEBI (பட்டியலிடுதல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு/ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு/ஆண்டுக்கான முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் (www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.indoasiafinance.com) ல் உள்ளது.

மேற்கண்ட முடிவுகள் தணிக்கை குழுவினரால் பரிசீலனை செய்யப்பட்டு, மே 25, 2024–ல் நடந்த இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இயக்குனர்கள் குழு சார்பாக
சல்லானி கேபிடல் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
பதம் ஜெ சல்லானி
நிர்வாக இயக்குநர்

தேதி : மே 25, 2024
இடம் : சென்னை

பெயர் மாற்றம்

நான் Yamarthi Venkata Sesha Sravanthi, க/பெ Naveen Krishna Yamarthi, பிறந்த தேதி 10/06/1982, எண். 25, கௌஸ்துபா, பிளாட் எண். 102, சிவப்பிரகாச நகர் 1 வது பிரதான சாலை, பூழித்திவாக்கம், மடிப்பாக்கம், சென்னை - 600091 இல் வசிக்கிறேன். இனிமேல் Yamarthi Venkata Sesha Sravanthi Krishna என அழைக்கப்படுவேன். வீடே அபிடேவிட் தேதியிட்ட 31-03-2006

Yamarthi Venkata Sesha Sravanthi

பெயர் மாற்றம்

OLD NAME :
SUR NAME : KUTTAN GANGADHARAN
GIVEN NAME : SAJEEVAN
பிறந்த தேதி: 16/06/1968,
முகவரி: ப்ளாட் A3, நித்யா ப்ளாட்ஸ், 15, கருணாநிதி 3வது தெரு, கோட்டூர், கோட்டூர்புரம், சென்னை - 600 085 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி
NEW NAME :
SUR NAME: KOZHIPARAMBIL GANGADHARAN
GIVEN NAME : SAJEEVAN
என்று அழைக்கப்படுகிறேன்.
SAJEEVAN KUTTAN GANGADHARAN

பெயர் மாற்றம்

OLD NAME :
SUR NAME : PHILIP
GIVEN NAME: PREETHA
MOTHER NAME : RAMONA PHILIP
பிறந்த தேதி: 23/10/1977,
முகவரி: எண்.10/16A, முதல் கெனால் குறுக்கு சாலை, காந்தி நகர், அடையார், சென்னை - 600 020 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி
NEW NAME :
SURNAME : PHILIP
GIVEN NAME : PREETHA
MOTHER NAME : RAMONA LALITHA KUMARI ANGUS DAVID
என்று அழைக்கப்படுகிறேன்.
PREETHA PHILIP

BEFORE THE HON'BLE DISTRICT MUNSIF COURT AT GUMMIDIPOONDI
I.A.No. 509 of 2019
In
O.S.No. 444 of 2019

Mrs. Chellammal and 3 others. . .. Petitioners/Plaintiffs
Subramani and 10 others ...Respondents/Defendants

To
Mrs. Kamakshi,
(Respondent 10/Defendant 10)
W/o. Ranganathan,
D/o. Ekambara Naicker,
Pudukuppam Village,
Sholavaram, Chennai 600 052.

Please take notice that the above petition in I.A.No.509/2019 is posted for your appearance on 13.06.2024 at 10.30 a.m. before the Hon'ble Court as per order dated 16.04.2024.

Hence you are required to appear before this Hon'ble Court either in person or through your counsel on 13.06.2024 at 10.30 a.m. failing which the matter will be heard and decided in your absence.

K. MANICKAVASAGAM &
D. RAGHUPATHY
Counsel for Petitioners/Plaintiffs

IN COURT OF SUBORDINATE JUDGE AT ALANDUR.
HMOP.No.463 of 2022

Mr.K. Nagendran ...Petitioner
Vs
Mrs. M. Menaga ...Respondent

அறிவிப்பு

மேற்படி எதிர்மனுதாரரின் கடைசியாக தெரிந்த முகவரி சேலம்– 636 006, சஞ்சீவராயன்பேட்டை, முனியப்பன் கோவில் தெரு, எண்.37/12Aவில் வசிக்கும் திரு.மீனாட்சி சுந்திரம் மகள் திருமதி. M.மேனகா அறிவது யாதெனில், மேற்படி மனுதாரர் தாங்களிடம் இருந்து விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது மேற்படி கோர்ட்டார் சமூகத்தில் 20.06.2024 அன்று தாங்கள் ஆஜராக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்த மனுவில் தாங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் தாங்கள் நேரடியாகவோ அல்லது தங்களின் வழக்கறிஞர் மூலமாகவோ மேற்படி தேதியன்று காலை 10.30 மணியளவில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

K.VENKATESAN,
Advocate & Notary.

ஊட்டியில் கவர்னர் ஆர்.என்.ரவி தலைமையில் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் 2 நாள் மாநாடு

சென்னை, மே.26

கவர்னர் ஆர்.என்.ரவி தலைமையில் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் பங்கேற்கும் 2 நாள் மாநாடு ஊட்டியில் நாளை (திங்கட்கிழமை) தொடங்குகிறது.

தமிழ்நாடு கவர்னரும், பல்கலைக்கழகங்களின் வேந்தருமான ஆர்.என்.ரவி, ஒவ்வொரு ஆண்டும் துணைவேந்தர்கள் மாநாட்டை நடத்தி வருகிறார். அந்த வகையில் கடந்த ஆண்டு (2023) ஜூன் மாதம் இந்த மாநாட்டை நடத்தி இருந்தார்.

அதனைத்தொடர்ந்து இந்த ஆண்டுக்கான துணைவேந்தர்கள் மாநாட்டை நாளையும் (திங்கட்கிழமை), நாளை மறுதினமும் (செவ்வாய்க்கிழமை) நீலகிரி மாவட்டம் ஊட்டியில் உள்ள கவர்னர் மாளிகையில் நடத்த திட்டமிடப்பட்டு இருக்கிறது.

இதற்காக தமிழ்நாட்டில் உள்ள 48 மத்திய, மாநில மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த மாநாட்டுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி தலைமை தாங்குகிறார். மாநாட்டின் தொடக்க அமர்வில் முதன்மை விருந்தினராக பல்கலைக்கழக மானியக்குழு (யு.ஜி.சி.) தலைவர் ஜெகதீஷ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்.

மாநாட்டில் ஆராய்ச்சியின் சிறப்பம்சம், நிறுவன மேம்பாடு, தொழில் முனைவோரை ஊக்குவித்தல், ஆசிரியர் உறுப்பினர்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் உலகளாவிய மனித வளங்களை ஊக்குவித்தல் தொடர்பான விவாதங்கள், விளக்கங்கள் மேற்கொள்ளப்பட உள்ளதாக கவர்னர் மாளிகை தரப்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 நாள் மாநாட்டில் எதிர்கால சிறப்பு ஆராய்ச்சி மற்றும் செயற்கை நுண்ணறிவை உருவாக்குதல், புதுமை மற்றும் தொழில் முனைவு, தேசிய சிறப்பு கட்டமைப்பின் மூலம் வாழ்நாள் முழுவதும் கற்றலை மேம்படுத்துதல், உலகளாவிய மனித வளங்கள், வளர்ந்துவரும் தொழில்துறை தேவைகளுக்கான ஆசிரியர்களின் திறனை உருவாக்குதல் போன்ற தலைப்புகளின் கீழ் அமர்வுகளும், உரையாடல் நிகழ்வுகளும் நடைபெற உள்ளன.

இதில் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், ஐ.ஐ.டி. முன்னாள் இயக்குனர், ஏ.ஐ.சி.டி.இ. தலைவர், ஆரோவில் அறக்கட்டளை செயலாளர் உள்பட பலரும் பங்கேற்று பேச இருக்கின்றனர்.

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 27பிKC, C–27, G– பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051 கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006. லேண்ட் மார்க்: எம்ஜி கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

பினன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி "பினன்பிஎச்எப்எல்" என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 23.04.2019 அன்று பினன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (இனி "பினன்பிஎச்எப்எல்" என்று குறிப்பிடப்படும்) அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.HOU/CHE10716/301745ன் கீழ்; கீழே உள்ள விவரங்களின்படி திரு. சுரேஷ் குமார் டி.எம் & திருமதி. எஸ் புனிதா ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 27.07.2018 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.51,04,496/–(ரூபாய் ஐம்பத்தோரு லட்சத்து நான்காயிரத்து நானூற்று தொன்னூற்று ஆறு மட்டும்)** மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையிலான பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் "எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்" வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விவரங்கள்	விவரங்கள்
ஏலத் தேதி	12.06.2024
ஏலம் நடைபெறும் நேரம்	மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்
ரிசர்வ் விலை	ரூ.13,20,000/- (ரூபாய் பதிமூன்று லட்சத்து இருபதாயிரம் மட்டும்)
டேவணித் தொகை டெபாசிட் (EMD)	ரூ.1,32,000/- (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்தி ரெண்டாயிரம் மட்டும்)
Kyc உடன் Emd ஐ சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	11.06.2024 அன்று மாலை 5:00 மணி வரை (இந்திய நேரப்படி)

ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம் : சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் காலி நிலம். அட்டவணை "A" மனை எண்.76ல் உள்ள 2370 சதுர அடி நிலம். சர்வே எண்.91/1சி மற்றும் 92/1டி, பட்டா எண்.1152, எண்.12, ஊனமஞ்சேரி கிராமம், சக்கரவர்த்தி நகர், லேஅவுட் Lp/dtcp எண். 1295/90, தேதி 17.01.1991, செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. எல்லைகள் : கிழக்கு:30 அடி சாலை,, மேற்கு: மனை எண்.75, வடக்கு: 23 அடி சாலை, தெற்கு: மனை எண் 77 மற்றும் விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில் 60 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம் 60 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம் 40 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம் 39 அடி.

சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் காலி நிலம். அட்டவணை "B" மனை எண்.76பில் உள்ள 783 சதுர அடி நிலம். சர்வே எண்.91/1சி மற்றும் 92/1டி, பட்டா எண்.1152, எண்.12, ஊனமஞ்சேரி கிராமம், சக்கரவர்த்தி நகர், லேஅவுட் Lp/dtcp எண். 1295/90, தேதி 17.01.1991, செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. எல்லைகள் : கிழக்கு: மனை எண்.76b,, மேற்கு: மனை எண்.75, வடக்கு: 23 அடி சாலை, தெற்கு: மனை எண் 77 மற்றும் விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில் 20'0" அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம் 20'0" அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம் 39'4, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம் 39'0". அட்டவணை "C" (இதன் மூலம் தெரிவிக்கப்பட்ட நிலம்) 320 சதுர அடி நிலத்தின் பிரிக்கப்படாத பங்கு (முந்நூற்று இருபது சதுர அடி), அட்டவணை "B" சொத்து

தெரிந்தவரை வில்லங்கள் : இல்லை

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. ஷியாம் நம்பூரி (+91 9677288418)** & **திரு. குர்பால் சிங் (+91 9592921114).** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR எண் (+919152219751)ஐ தொடர்பு கொள்ளலாம்

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் https://www.kotak.com/en/bankauctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை, தேதி: 26.05.2024 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

kotak Kotak Mahindra Bank — கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

பதிவு அலுவலகம்: 27பிKC, C–27, G– பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051 கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006. லேண்ட் மார்க்: எம்ஜி கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

பினன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி "பினன்பிஎச்எப்எல்" என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 10.04.2024 அன்று கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (இனிமேல் "வங்கி/கேஎம்பிஎல்/ஈடுபெற்ற கடன் வழங்கியவர்) அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.HOU/CHE/0317/366255ன் கீழ்; கீழே உள்ள விவரங்களின்படி திருமதி டியோகீதா, திரு. ஜே.எஸ்.தன்சேகர் ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 30.04.2024 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.54,55,589/–(ரூபாய் ஐம்பத்து நான்கு லட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து ஐநூற்று எண்பத்தொன்பது மட்டும்)** மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் "எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்" வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விவரங்கள்	விவரங்கள்
ஏலத் தேதி	03.07.2024
ஏலம் நடைபெறும் நேரம்	மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்
ரிசர்வ் விலை	ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து லட்சம் மட்டும்)
டேவணித் தொகை டெபாசிட் (EMD)	ரூ.2,50,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)
Kyc உடன் Emd ஐ சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	02.07.2024 அன்று மாலை 5:00 மணி வரை (இந்திய நேரப்படி)

ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம்: சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் 385 சதுர அடி, காலி நிலத்தில் பிரிவுபடாத பங்கு நிலம் 84 சென்ட் (49 சென்ட் சர்வே எண்.75/2A மற்றும் 35 சென்ட் சர்வே எண்.78/3A2) டிடிசிபி அங்கீகார எண்.50/2011, இந்த சொத்தானது வைகை நகர், எண்.4 ஊரப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. பிளாட் எண்.ஜி1, கீழ் தளம், எம் பிளாக், விஸ்தீரணம் 781 சதுர அடி (பொதுப் பகுதியை உள்ளடக்கி உள்ளது) திட்டத்தின் பெயர் "மதுராபுரி" மற்றும் நிலத்தின் எல்லைகள் : கிழக்கில் : சர்வே எண்.78 (பகுதி), மேற்கில் : சர்வே எண்.74(பகுதி), வடக்கில் : சர்வே எண்.75(பகுதி) மற்றும் 78 (பகுதி), தெற்கில் : சர்வே எண்.75 (பகுதி) மற்றும் 78/2. இந்த சொத்தானது கூடுவாஞ்சேரி சார் பதிவு அலுவலகம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்ட எல்லைக்கு உட்பட்டு உள்ளது.

தெரிந்தவரை வில்லங்கள் : இல்லை

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. ஷியாம் நம்பூரி (+91 9677288418) & திரு. குர்பால் சிங் (+91 9592921114).** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR எண் (+919152219751)ஐ தொடர்பு கொள்ளலாம்

விற்பனைக்கானவிரிவானவிதிகள்மற்றும்நிபந்தனைகளுக்குகோடக்மஹிந்திராபேங்க்லிமிடெட்இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் https://www.kotak.com/en/bankauctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை, தேதி: 26.05.2024 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

U GRO CAPITAL LIMITED

4வது தளம், டவர் 3, ஈக்வினாக்ஸ் பிசினஸ் பார்க், எல்பிஎஸ் சாலை, குர்லா, மும்பை 400070

அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002 விதி 8 மற்றும் 9–ன் கீழ் அசையாச் சொத்து(கள்) ["ஈடுபெற்ற சொத்து(கள்)"] விற்பனைக்கு 30 நாட்களுக்கு மின்னணு–ஏல விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாகக் கடன்தாரர்களுக்கும் மற்றும் உத்தரவாததாரர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் (கள்) மற்றும் உத்தரவாததாரர் (கள்) ஆகியோரிடமிருந்து ஈடுபெற்ற கடனாளியின் மூலம் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகள் மற்றும் கூடுதல் வட்டி மற்றும் அதற்கான பிற செலவுகளை வசூலிக்க கீழே விவரிக்கப்பட்டுள்ள ஈடுபெற்ற/அடமான வைக்கப்பட்ட சொத்துக்கள், ஈடுபெற்ற கடன் வழங்கியவரான யு குரோ கேபிடல் லிமிடெட்டின் ("ஈடுபெற்ற கடன்தாரர்") அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் எடுக்கப்பட்டது. அது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் நேரத்தில், "உள்ளது உள்ளவாறு அடிப்படையில் எப்படி உள்ளதோ அப்படியே எங்கு உள்ளதோ அங்கேயே" விற்பனை செய்யப்படும். ரிசர்வ் விலை, டேவணித் தொகை டெபாசிட் (EMD) மற்றும் EMD டெபாசிட்டின் கடைசி தேதியும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

கடன்தாரர்(கள்)/ உத்தரவாததாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு விவரம்	ஏல விவரங்கள்	
1.விமலா ஏஜென்சீஸ் 2. ஆனந்த் பன்சிலால் ஜெயின் 3.ஹரிஷ் பன்சிலால் ஜெயின் 4.பன்சிலால் பிரேம்ராஜ் ஜெயின் கடன் கணக்கு எண். HCFCHESEC00001020095	கோரிக்கை அறிவிப்பு தேதி: 18–11–2023 தொகை: 15–11–2023 அன்று ரூ.1,92,94,002/–	ரிசர்வ் விலை	ரூ.4,83,17,300/–
		டேவணித் தொகை டெபாசிட்	ரூ.48,31,730/–
		டேவணித் தொகை டெபாசிட் கடைசி தேதி	05.07.2024
		ஏலத் தேதி	08.07.2024
		ஏல நேரம்	காலை 11 மணி முதல் 1.00 மணி வரை
		அதிகரிப்பு மதிப்பு	ரூ.1,00,000/–

ஈடுபெற்ற சொத்துகள் குறித்த விவரம் : அமிட்டம் I – நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும், கிராமநத்தம் பழைய ச.எண்.878/297, புதிய ச.எண்.878/286, பட்டா எண்.1976, புதிய ச.எண்.1563/17பி, விஸ்தீரணம் 660 சதுர அடி "பஜார் தெரு"வில் அமைந்துள்ளது. உத்திரமேரூர் டவுன் மற்றும் கிராமம், உத்திரமேரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள்: வடக்கில் கிராமநத்தம் ச.எண்.1563/17ஏ, தெற்கில் பஜார் தெரு கிழக்கில் கிராம நத்தம் ச.எண்.1563/18ஏ, மேற்கில் ச.எண்.1563/16 மசூதி நிலம் மற்றும் விஸ்தீரணம் 660 சதுர அடி மற்றும் கீழ்க்கண்ட அளவீடுகள்: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 22 அடி கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 22 அடி வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 30 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில்: 30 அடி

அமிட்டம் II – நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும், கிராமநத்தம் ச.எண்.878/296, பட்டா எண்கள்.1974, 1975, புதிய ச.எண்கள். 1563/17ஏ & 1563/18பி விஸ்தீரணம் 1260 சதுர அடி "வைகுண்ட பெருமாள் கோவில் தெரு"வில் அமைந்துள்ளது. உத்திரமேரூர் டவுன் மற்றும் கிராமம், உத்திரமேரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள்: வடக்கில் கிராமநத்தம் ச.எண்கள்.1563/17ஏ மற்றும் 1563/18பி தெற்கில் கிராமநத்தம் ச.எண். 1563/17பி & 1563/18ஏ, கிழக்கில் கிராம நத்தம் ச.எண். 1563/18பி & 1563/18ஏ, மேற்கில் ச.எண்.1563/16 மசூதி நிலம் மற்றும் விஸ்தீரணம் 1260 சதுர அடி மற்றும் கீழ்க்கண்ட அளவீடுகள்: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 30 அடி கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 30 அடி வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 42 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில்: 42 அடி.

அமிட்டம் III – நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும், கிராமநத்தம் ச.எண்.878/296, பட்டா எண்.1975, புதிய ச.எண். 1563/17ஏ விஸ்தீரணம் 56 சதுர அடி "வைகுண்ட பெருமாள் கோவில் தெரு"வில் அமைந்துள்ளது. உத்திரமேரூர் டவுன் மற்றும் கிராமம், உத்திரமேரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள்: வடக்கில் கிராமநத்தம் ச.எண்.1563/17ஏ, தெற்கில் கிராமநத்தம் ச.எண். 1563/17ஏ, கிழக்கில் கிராம நத்தம் ச.எண். 1563/17ஏ, மேற்கில் ச.எண்.1563/16 மசூதி நிலம் மற்றும் விஸ்தீரணம் 56 சதுர அடி மற்றும் கீழ்க்கண்ட அளவீடுகள்: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 12 அடி 3 இஞ்ச் கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 12 அடி 3 இஞ்ச் வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 04 அடி 5 இஞ்ச் வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில்: 04 அடி 5 இஞ்ச்.

அமிட்டம் IV – நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும், கிராமநத்தம் ச.எண்.878/296, பட்டா எண்கள்.1974, 1975 புதிய ச.எண்கள். 1563/17ஏ & 1563/18பி, விஸ்தீரணம் 1260 சதுர அடி "வைகுண்ட பெருமாள் கோவில் தெரு"வில் அமைந்துள்ளது. உத்திரமேரூர் டவுன் மற்றும் கிராமம், உத்திரமேரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள்: வடக்கில் கிராமநத்தம் ச.எண்கள்.1563/ 15பி தெற்கில் கிராமநத்தம் ச.எண். 1563/17ஏ & 1563/18பி, கிழக்கில் கிராம நத்தம் ச.எண். 1563/18பி, மேற்கில் ச.எண்.1563/16 மசூதி மற்றும் விஸ்தீரணம் 1260 சதுர அடி மற்றும் கீழ்க்கண்ட அளவீடுகள்: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 30 அடி கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 30 அடி வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 42 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில்: 42 அடி.

அமிட்டம் V – நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும், கிராமநத்தம் ச.எண்.878/296, பட்டா எண்.1973, புதிய ச.எண். 1563/15பி, விஸ்தீரணம் 2100 சதுர அடி "வைகுண்ட பெருமாள் கோவில் தெரு"வில் அமைந்துள்ளது. உத்திரமேரூர் டவுன் மற்றும் கிராமம், உத்திரமேரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள்: வடக்கில் கிராமநத்தம் ச.எண்.1563/14, தெற்கில் கிராமநத்தம் ச.எண். 1563/18பி & 1563/19 to 23, 24ஏ, 878/151, கிழக்கில் வைகுண்ட பெருமாள் தெரு, மேற்கில் அமிட்டம் X கிராம நத்தம் ச.எண்.1563/15பி மற்றும் விஸ்தீரணம் 2100 சதுர அடி மற்றும் கீழ்க்கண்ட அளவீடுகள்: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 100 அடி கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 100 அடி வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 21 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில்: 21 அடி.

அமிட்டம் VI – நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும், கிராமநத்தம் ச.எண்.878/151, பட்டா எண்.960, புதிய ச.எண். 878/151, விஸ்தீரணம் 872 சதுர அடி (2 சென்ட்ஸ்) உத்திரமேரூர் டவுன் மற்றும் கிராமம், உத்திரமேரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம்.

அமிட்டம் VII – நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும், கிராமநத்தம் ச.எண்.878/296, பட்டா எண்.1974 புதிய ச.எண். 1563/18பி விஸ்தீரணம் 1386 சதுர அடி வைகுண்ட பெருமாள் கோவில் தெருவில் அமைந்துள்ளது. உத்திரமேரூர் டவுன் மற்றும் கிராமம், உத்திரமேரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள்: வடக்கில் கிராமநத்தம் ச.எண்கள்.1563/15பி தெற்கில் கிராமநத்தம் ச.எண். 1563/18பி, கிழக்கில் கிராம நத்தம் ச.எண்கள்.878/151 & 1563/19, மேற்கில் ச.எண்.1563/18பி மற்றும் விஸ்தீரணம் 1386 சதுர அடி மற்றும் கீழ்க்கண்ட அளவீடுகள்: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 33 அடி கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 33 அடி வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 42 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில்: 42 அடி.

அமிட்டம் VIII – நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும், கிராமநத்தம் ச.எண்.878/296, பட்டா எண்கள்.1974, 1975, புதிய ச.எண். 1563/17ஏ & 1563/ 18பி விஸ்தீரணம் 56 சதுர அடி "வைகுண்ட பெருமாள் கோவில் தெரு"வில் அமைந்துள்ளது. உத்திரமேரூர் டவுன் மற்றும் கிராமம், உத்திரமேரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள்: வடக்கில் கிராமநத்தம் ச.எண்கள்.1563/17ஏ, 1563/18பி தெற்கில் கிராமநத்தம் ச.எண். 1563/17ஏ & 1563/18பி, கிழக்கில் கிராம நத்தம் ச.எண். 1563/18பி மேற்கில் ச.எண்.1563/17ஏ மற்றும் விஸ்தீரணம் 56 சதுர அடி மற்றும் கீழ்க்கண்ட அளவீடுகள்: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 12 அடி 5 இஞ்ச் கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 12 அடி 5 இஞ்ச் வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 04 அடி 5 இஞ்ச் வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில்: 04 அடி 5 இஞ்ச்.

அமிட்டம் IX– நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும், கிராமநத்தம் ச.எண்.878/296, பட்டா எண்கள்.1974 புதிய ச.எண். 1563/18பி விஸ்தீரணம் 1386 சதுர அடி. உத்திரமேரூர் டவுன் மற்றும் கிராமம், உத்திரமேரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள்: வடக்கில் கிராமநத்தம் ச.எண்.1563/18பி தெற்கில் கிராமநத்தம் ச.எண். 1563/18ஏ, கிழக்கில் கிராம நத்தம் ச.எண் 1563/19, மேற்கில் ச.எண்.1563/18பி மற்றும் விஸ்தீரணம் 1386 சதுர அடி மற்றும் கீழ்க்கண்ட அளவீடுகள்: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 33 அடி கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 33 அடி வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 42 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில்: 42 அடி.

அமிட்டம் X – நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும், கிராமநத்தம் ச.எண்.878/296, பட்டா எண்.1973, புதிய ச.எண். 1563/15பி, விஸ்தீரணம் 2100 சதுர அடி . உத்திரமேரூர் டவுன் மற்றும் கிராமம், உத்திரமேரூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள்: வடக்கில் கிராமநத்தம் ச.எண்.1563/14, தெற்கில் கிராமநத்தம் ச.எண். 1563/16, 1563/17ஏ, 1563/18பி, கிழக்கில் அமிட்டம் VII கிராம நத்தம் ச.எண்.1563/15பி, மேற்கில் கிராம நத்தம் ச.எண்கள் 1563/14, 1563/15ஏ மற்றும் விஸ்தீரணம் 2100 சதுர அடி மற்றும் கீழ்க்கண்ட அளவீடுகள்: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 100 அடி கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில்: 100 அடி வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 21 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில்: 21 அடி.

மொத்த விஸ்தீரணம் மற்றும் பரப்பளவு 11136 சதுர அடி (அமிட்டம் I முதல் X வரை) உத்திரமேரூர் துணைப் பதிவு மாவட்டம், செங்கல்பட்டு பதிவு மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

கடன்தாரர்(கள்)/ உத்தரவாததாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு விவரம்	ஏல விவரங்கள்	
1. சீயோன் கன்சல்டன்ட்ஸ் 2. ரூபி ஜோசப் 3. ஜோசப் ரெபெக்கா எலிசபெத் சுசன்னா 4. சார்லஸ் ஆனந்த் ஜோசப் கடன் கணக்கு எண். HCFCHESEC00001035642	நோட்டீஸ் தேதி 13.10.2023 06.10.2023 அன்று ரூ.34,30,706/–	ரிசர்வ் விலை	ரூ.47,93,600/–
		டேவணித் தொகை டெபாசிட்	ரூ.4,79,360/–
		டேவணித் தொகை டெபாசிட் கடைசி தேதி	05.07.2024
		ஏலத் தேதி	08.07.2024
		ஏல நேரம்	காலை 11 மணி முதல் 1.00 மணி வரை
		அதிகரிப்பு மதிப்பு	ரூ.1,00,000/–

ஈடுபெற்ற சொத்துகள் குறித்த விவரம் : சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் மற்றும் நிலம் மற்றும் கட்டிடம். டி.எஸ்.எண்.132 பகுதி, புதிய டி.எஸ். எண்கள்.132/1 & 132/2, பிளாக் எண்.26–ல் உள்ள 2400 சதுர அடி நிலத்தில் 254 சதுர அடி பிரிவுபடாத பங்கு நிலம், சென்னை மாவட்டம், அயனாவரம் கிராமம் மற்றும் தாலுகா, சோமசுந்தரா 4வது தெருவில் அமைந்துள்ள பிளாட், எண்.எப்1, முதல் தளத்தில் உள்ள 896 சதுர அடி மற்றும் கார் பார்க்கிங் (பொது இடம் உட்பட)

விற்பனை குறித்த விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு,யு குரோ கேபிடல்/ஈடுபெற்ற கடன் வழங்கியவரின் இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும். அதாவது www.ugrocapital.com அல்லது கீழே கையொப்பமிடப்பட்டவரை authorised.officer@ugrocapital.comஇல் தொடர்பு கொள்ளவும்.

தேதி : 26.05.2024 — ஒப்பம்/– காசிபோட்லா குடும்பா ராம்பிரசாத் (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
இடம் : தமிழ்நாடு — யு குரோ கேபிடல் லிமிடெட்டிற்காக